# மான்மின் செய்திகள்
# Manmin News

Manmin Ministries India 15D/41, Ponnankinaru St, Villivakkam, Chennai - 49, India. Ph: 044-26172471 Email: manminnewsasia@gmail.com


## அறிவர். ஜேராக் லீ அவர்களின் பிரசங்கம் இந்தியாவிலுள்ள ஒரு கிறிஸ்தவ தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்படுகிறது




ஜூன் 20, 2017 முதல் அறிவர். ஜேராக் லீ அவர்களின் பிரசங்கமானது ஒவ்வொரு செவ்வாய்கிழமையும் இரவு 7.30 மணிக்கு குட்நியூஸ் தொலைக்காட்சி குழுமத்தின் தமிழ் அலைவரிசையான நம்பிக்கை தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்படுகிறது. அவர்கள் ஒரு கிறிஸ்தவ தொலைக்காட்சியாளர்கள், GCNனோடு ஒப்பந்தத்தில் உள்ளனர்.

இந்தியாவில் டிடிஎச் சேவையை வழங்குவதில் முன்னணியில் இருக்கும் டாட்டா ஸ்கை (Tata sky DTH) மூலம் நம்பிக்கை தொலைக்காட்சியை காணலாம். மேலும் அதனை இணையதள தொலைக்காட்சி செயலியான ஜியோ TV மூலமாக செல்போனிலேயே பார்க்கவும் முடிகிறது. ‘‘அறிவர். ஜேராக் லீ அவர்களின் ஜீவனுள்ள வார்த்தைகள்’’ என்ற நிகழ்ச்சி தமிழில் டப்பிங் (ஒலிச்சேர்க்கை) செய்யப்படுகிறது. இந்த நிகழ்ச்சிகள் பிரான்ஸில் உள்ள ஹோலி காட் TVக்கும், இந்தியாவின் புதுச்சேரியிலுள்ள அருள்வாக்கு GCNக்கும்கூட வழங்கப்படுகிறது. இவை இந்தியா மற்றும் அண்டைநாடுகளில் காணும்படி ஒளிபரப்பாகிறது.

நம்பிக்கை தொலைக்காட்சி நிகழ்ச்சிக்கான முன்னோட்டத்தை (Trailer) ஜூன் 9 முதல் காண்பிக்க துவங்கியது. ‘சிலுவையின் செய்தி’ என்ற பிரசங்கம் ஒளிபரப்புவதற்கு முன்பதாக இந்த நிகழ்ச்சியை பிரபலப்படுத்தும்விதமாக ‘இந்திய சரித்திரத்திலேயே அதிக தொகையிலான மக்கள் பங்குப்பெற்ற படைமுயற்சிகூட்டம்’ என்று நினைவுகூரப்படுகிற, 30 இலட்சத்துக்கும் அதிகமான மக்கள் பங்குப்பெற்ற அறிவர் ஜேராக் லீ அவர்களின் 2002 அற்புத சுகமளிக்கும் ஜெபத்திருவிழா ஒளிபரப்பப்படுகிறது.

## இரண்டாவது மியான்மர் மற்றும் லவோஸ் போதகர்கள் கருத்தரங்கு 2017







2017, ஜூன் 6 முதல் 7 வரை இரண்டாவது மியான்மர் மற்றும் லவோஸ் போதகர்கள் கருத்தரங்கு 35 சபை ஸ்தாபனங்களிலிருந்து 80க்கும் மேற்பட்ட போதகர்கள் மற்றும் தலைவர்கள் பங்குப்பெற நடைபெற்றது. அவர்கள் அனைவரும் தாய்லாந்து எல்லைப் பகுதியிலுள்ள மேசாய் சபையில் கூடினார்கள்.

தாய்லாந்தில் உள்ள சியாங்ராய் மான்மின் திருச்சபையின் போதகர் ஜேவொன் லீ காலை மதியம் என ஒரு நாளைக்கு இரண்டு முறை பிரசங்கத்தை கொடுத்தார். அறிவர். ஜேராக் லீ அவர்களின் ‘‘ஆதியாகம விரிவுரைகள்’’ என்ற பிரசங்கத் தொடரின் அடிப்படையில் ஆவிக்குரிய உல–கத்திலுள்ள தூதர்கள், கேருபீன்கள் மற்றும் அசுத்த ஆவிகளின் உலகம் போன்றவைகளை குறித்துப் பேசினார். அவர் அறிவர். லீ அவர்களின் ‘‘சிலுவையின் செய்தி’’ என்ற பிரசங்கத்தொடரிலிருந்து உண்மையான விசுவாசம் மற்றும் நித்திய வாழ்வை குறித்துப் பேசினார். பங்குப்பெற்றவர்கள் ஆவிக்குரிய உலகத்தை குறித்த மறைக்கப்பட்ட பிரசங்கத்தை கேட்டபொழுது தேவனுடைய அன்பையும், அநாதி திட்டத்தையும் உணர்ந்துகொண்டனர். இந்தப் பிரசங்கங்களை முன்னமே பிரசங்கித்து கொடுத்த தலைமை போதகர் அறிவர். ஜேராக் லீ அவர்களுக்கு தங்களது உள்ளங்கனிந்த நன்றிகளை தெரிவித்தனர்.

தலைவர்களோடு அவர்கள் இணைந்து ‘அக்கினி முகாம் துதி ஆராதனை’ நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர். அவர்கள் துதித்து ஜெபித்தபொழுது, ஆண்டவரின் அன்பை தியானித்தனர்; எதிர்கால ஊழியத்திற்கென புதிய தீர்மானங்களையும் எடுத்துக் கொண்டனர்.

## ‘‘ஆவிக்குரிய உலகத்தின் பிரசங்கங்கள் என்னை பரவசமூட்டின’’

**போதகர் யாசே, வயது 45, மியான்மரில் உள்ள யொட்டாயா சபை**



கருத்தரங்கில் ஆவிக்குரிய உலகத்தைப் பற்றிய பிரசங்கத்தை நான் கேட்டபொழுது பரவசமடைந்தேன். நான் தூதர்களின் குணாதிசயங்கள், அவர்களின் வேலைகள், அமைப்புமுறை மற்றும் ஒழுங்குகள்; கேருபீன்களின் வேலைகள் மற்றும் அசுத்த ஆவிகளின் உலகம் போன்றவற்றை குறித்து முதல் முறையாக கேட்டேன். பிரசங்கமானது மிகுந்த இனிமையாகவும், ஆழ்ந்த அர்த்தங்கள் பொதிந்ததாகவும் இருந்ததால் நேரம் கடந்துபோனதை நான் உணரவே இல்லை. நான் மிகுந்த பரவசத்தில் இருந்ததால் அதன் பிறகு என்னால் தூங்கவும்கூட முடியவில்லை.

சியாங்ராய் மான்மின் சபையின் தலைவர்களும் எங்களுடன் பங்குப்பெற்றனர். அவர்கள் அனைவரும் தோற்றத்திலும் ஆடையிலும் நேர்த்தியாகவும் ஒழுங்காகவும் காட்சியளித்தனர். அவர்கள் ஊக்கமாக ஜெபித்தனர்; மென்மையான வார்த்தைகளோடும் தாழ்மையோடும் எங்களுக்கு பணிவிடை செய்தனர். அவர்களால் நான் ஈர்க்கப்பட்டேன். அவர்கள் கர்த்தருடைய நாளை கைக்கொண்டு, முழு தசமபாகம் செலுத்தி ஊக்கமாக ஜெபிப்பதினால் ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்கின்றனர் என்பதை நான் கேள்விப்பட்டேன். அவர்கள் தேவனுடைய வார்த்தையினால் வாழ்வதின்மூலம் தேவ ஆசீர்வாதங்களை அனுபவித்ததற்கான சாட்சிகளாக இருக்கின்றனர். அதைக் கேள்விப்பட்ட நானும் மிகுதியாக ஆசீர்வதிக்கப்பட்டேன்.

‘வாழ்க்கைக்கான செய்திகளை’ பிரசங்கிக்கிற உலக எழுப்புதல் போதகர் அறிவர். ஜேராக் லீ அவர்களுக்கு என் உள்ளங்கனிந்த நன்றிகளை நான் வெளிப்படுத்துகிறேன்.

## ஞாயிறு ஓய்வுநாள் பள்ளி ஆசிரியர்களுக்கான கருத்தரங்கு

2017, ஜூன் 12 முதல் 14 வரை, ‘‘வல்லமை’’ (யோவான் 14:12) என்ற தலைப்பின்கீழ் மான்மின் தலைமை சபையின் நான்காவது ஆலயக்கட்டிடத்தில் வைத்து இயேசுகிறிஸ்துவின் ஒருங்கிணைந்த பரிசுத்த திருச்சபையின் கல்வித்துறையினரால் ஓய்வுநாள் பள்ளி ஆசிரியர்களுக்கான கருத்தரங்கு நடைபெற்றது. ஜூன் 12 அன்று இரவு 7.30 மணிக்கு மத்திய பகுதி சபைகளின் தலைவராக உள்ள போதகர் டேசிக் கில் அவர்கள் செய்தியை பிரசங்கிக்க தொடக்க ஆராதனை ஏறெடுக்கப்பட்டது.

மான்மின் ஜெபமையத்தின் தலைவி போக்னிம் லீ, போதகர் எஸ்தர் ச்சங், போதகர் மியாங் லீ, போதகர் மிக்யங்க லீ, போதகர் சூஜங் கிம், மூத்த கண்காணியை கியும்சன் வின் மற்றும் துதிஆராதனை தலைவி ரோஸ் ஹான் போன்றோர் செய்திகளை வழங்கினர். அவர்களுடைய பிரசங்–கங்கள் அன்பும் நற்குணமும் நிறைந்த தேவனுடைய மெய்யான இருதயத்தை உணர்ந்து கொள்வதற்கு நல்லதொரு வாய்ப்பாக பங்குப்பெற்றவர்களுக்கு இருந்தது; மேலும் பரிசுத்த வேதாகமத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ள அற்பு–தங்கள், அடையாளங்கள் மற்றும் வல்லமையான கிரியைகளை ஆழமாய் நினைப்பதற்கான நேரமாகவும் அமைந்தது.




2017 ஓய்வுநாள் ஆசிரியர்கள் கருத்தரங்கு பாடப்புத்தகம்



தலைமை போதகர் அறிவர். ஜேராக் லீ

# அநீதியுள்ள உக்கிராணக்காரன்

“அநீதியுள்ள உக்கிராணக்காரன் புத்தியாய்ச் செய்தான் என்று எஜமான் கண்டு, அவனை மெச்சிக்கொண்டான். இவ்விதமாய் ஒளியின் பிள்ளைகளைப் பார்க்கிலும் இந்தப் பிரபஞ்சத்தின் பிள்ளைகள் தங்கள் சந்ததியில் அதிக புத்திமான்களாயிருக்கிறார்கள்” (லூக்கா 16:8).

இயேசுவானவர் தம்முடைய சீஷர்களுக்கு உபதேசித்த போது, நன்றாகப் புரிந்துக்கொள்வதற்காக உவமைகளாக பேசினார். ஆனால் அநேக மக்கள் அதன் ஆவிக்குரிய அர்த்தத்தை தெளிவாகப் புரிந்துகொள்ளாமல் அவைகளை பல வித்தியாசமான வழிகளில் வியாக்கியானம் செய்கிறார்கள். இன்றைய செய்தியும்கூட மக்கள் புரிந்துக்கொள்ள கஷ்டப்படுகிற உவமைகளில் ஒன்றாய் இருக்கிறது. இப்போது அநீதியுள்ள உக்கிராணக்காரன் என்ற உவமையைப் பார்ப்போம்.

### 1. அநீதியுள்ள உக்கிராணக்காரன் தன் எஜமானின் ஆஸ்தியை அழித்தான்

இயேசுவானவர் இந்த உவமையை லூக்கா 16:1ல் சொல்லத் துவங்கினார், “ஐசுவரியவானாகிய ஒரு மனுஷனுக்கு ஒரு உக்கிராணக்காரன் இருந்தான்; அவன் தன் எஜமானுடைய ஆஸ்திகளை அழித்துக்போடுகிறதாக எஜமானுக்கு அறிவிக்கப்பட்டது.” இங்கே, ஐசுவரியவானாகிய ஒரு மனுஷன் என்பது இயேசு கிறிஸ்துவை குறிக்கிறது. அநீதியுள்ள உக்கிராணக்காரன் கூலிக்காரனான மேய்ப்பனை குறிக்கிறது (யோவான் 10:12). “எஜமானுடைய ஆஸ்திகளை அழித்துப்போடுகிறது” என்பது கூலிக்காரனான மேய்ப்பன், ஆண்டவர் அவனை நம்பி, விசுவாசத்தின் பூரண நிச்சயத்திற்கு, கொடுத்த மந்தைகளை நடத்த தவறியவன், அவைகளை அவன் நன்கு பராமரிக்கவில்லை என்ற அர்த்தமாகும்.

இங்கே அநீதியுள்ள உக்கிராணக்காரன் என்பது பணத்திற்காக தங்கள் ஊழியத்தை செய்கிற போதகர்களை மட்டும் குறிக்கவில்லை, ஆனால் தங்கள் குழு அல்லது செல் அங்கத்தினர்களை தேவனுடைய கிருபையில் இருக்கச் செய்து, பரிசுத்த ஆவியின் நிறைவில் தங்கி, அவர்களது விசுவாசத்தில் வளர வழிநடத்துவதற்கு தவறிய திருச்சபையின் தலைவர்களையும் குறிக்கிறது. அவர்கள் எஜமானுடைய ஆஸ்தியை அழிக்கிறார்கள். தங்களுடைய கடமைகளைச் செய்யாமல் தேவனுடைய வேலை தாமதமாவதற்கு காரணமாகிறதும் எல்லாமும்கூட “எஜமானுடைய ஆஸ்திகளை அழிக்கிறதாகும்.”

கூலிக்காரர்களைப் போல உள்ள மக்கள் கனம் வல்லமையைப் பெற்று சேவை செய்யப்படுவதிலேயே ஆர்வமாக இருப்பார்கள். அவர்கள் தங்கள் கடமையைக் குறித்து அக்கறையில்லாமல், ஆண்டவரால் அவர்களுக்கு அறிவிக்கப்பட்ட விலையேறப்பெற்ற பணியை சந்தோஷமாக எடுத்துக்கொள்ளாமல் இருப்பார்கள். ஆக, அவர்கள் மக்களுக்கு போதித்தாலும்கூட அவர்கள் விசுவாசத்தில் வளர உதவி செய்ய முடியாது இருப்பார்கள்.

லூக்கா 16:2 சொல்கிறது, “அப்பொழுது எஜமான் அவனை வரவழைத்து: உன்னைக் குறித்து நான் இப்படிக் கேள்விப்படுகிறதென்ன? உன் உக்கிராணக் கணக்கையொப்புவி, இனி நீ உக்கிராணக்காரனாயிருக்கக்கூடாது என்றான்.” ஒரு காலத்தில் ஒருவன் தன் கடமைகளில் உண்மையுள்ளவராயிருந்தாலும்கூட, அவன்தான் முந்திசெய்த கிரியைகளை இழந்துப்போய் மனந்திரும்பாவிட்டால், அவனது கடமை அவனிடத்திலிருந்து வேறொருவருக்குக் கொடுக்கப்படும். வெளிப்படுத்தல் 2:5 சொல்கிறது, “...இல்லாவிட்டால் நான் சீக்கிரமாய் உன்னிடத்தில் வந்து, நீ மனந்திரும்பாதபட்சத்தில், உன் விளக்குத்தண்டை அதனிடத்தினின்று நீக்கிவிடுவேன்.”

### 2. அநீதியுள்ள உக்கிராணக்காரனை எஜமான் பாரட்டியத்தின் காரணம்

லூக்கா 16:3ல், அநீதியுள்ள உக்கிராணக்காரன் தன்னுடைய கடமையை இனி அவன் தொடர்ந்து செய்ய முடியாது என்று கேள்விப்பட்டபோது, தன் கடந்த காலத்தை திரும்பி பார்த்து மனந்திரும்புவதற்கு பதிலாக இனி அவன் செய்ய வேண்டியது என்ன என்று கவலைப்பட்டான். அவன் தன் எஜனமானிடத்தில் கடன்பட்டவர்களை ஒவ்வொருவனாக வரவழைத்து, அவர்களுக்கு அவர்கள் கடன் சீட்டை குறைத்து எழுதும்படி அநுக்கிரகம் செய்தான். அவர்கள் நூறு குடம் எண்ணெயை ஐம்பதாகவும், நூறு களம் கோதுமையை ஐம்பது களமாகவும் சீட்டில் மாற்றி எழுதி அனுமதிக்கப்பட்டனர். அந்த உக்கிராணக்காரன் அவர்களுக்கு அநுகிரகம் செய்தால் அவன் வேலையை இழந்தபின் அவர்கள் தன்னை அவர்கள் வீடுகளில் ஏற்றுக்கொள்வார்கள் என்று நினைத்தான்.

அவனுடைய எஜமான் அதை கண்டு, அநீதியுள்ள உக்கிராணக்காரன் புத்தியாய் நடந்தான் என்று அவனைப் பாராட்டினான். ஏன் எஜமான் அந்த உக்கிராணக்காரனைப் பாரட்டினார்? இங்கு, “எஜமானிடத்தில் கடன்பட்டவர்கள்” என்பது ஆவிக்குரிய ரீதியில் ஆண்டவரை ஏற்றுக்கொள்ளாமல் இரட்சிப்பை பெறாதவர்களைக் குறிக்கிறது. அவர்கள் இன்னும் பாவ பாரத்தில்தான் இருக்கிறார்கள்.

அநீதியுள்ள உக்கிராணக்காரன் அவர்கள் பட்ட கடன் சிலதை அழித்துவிட்டான். இதன் ஆவிக்குரிய அர்த்தம் அவன் அவர்களுக்கு இயேசு கிறிஸ்துவைக் குறித்தும் அவருடைய நாமத்தின் மூலமாய் கிடைக்கிற இரட்சிப்பைக் குறித்தும் போதித்தான். அவனால் அவர்களை பூரண இரட்சிப்புக்கு வழிநடத்த முடியவில்லையென்றாலும் இதைச் செய்தான். ஆக, எல்லா ஆத்துமாக்களும் இரட்சிக்கப்பட வேண்டும் என்று விரும்புகிற ஆண்டவர், அந்த அநீதியுள்ள உக்கிராணக்காரனைப் பாராட்டினார். அவர், “ஒளியின் பிள்ளைகளைப் பார்க்கிலும் இந்தப் பிரபஞ்சத்தின் பிள்ளைகள் தங்கள் சந்ததியில் அதிக புத்திமான்களாயிருக்கிறார்கள்” என்றார் (லூக்கா 16:8). ஒளியின் பிள்ளைகளைப் பார்க்கிலும் இப்பிரபஞ்சத்தின் பிள்ளைகள் அதிக ஞானவான்களாக இருக்கிறார்கள் என்று இது உண்மையில் அர்த்தப்படுத்தவில்லை. ஆனால் இது, “அவர்களது சொந்த வகையில் சம்பந்தப்படுத்தி” சொல்கிறது. வேறு வார்த்தையில், இந்தப் பிரபஞ்சத்தில் அதாவது இருளான இந்தப் பிரபஞ்சத்தில், அநீதியுள்ள நியாயாதிபதி செய்தது புத்தியாய் நடந்ததாகக் கருதப்படுகிறது.

### 3. உண்மையில் புத்திமான்கள் இப்பிரபஞ்சத்தின் பிள்ளைகள் அல்ல ஆனால் ஒளியின் பிள்ளைகள்

எந்த ஒரு சூழ்நிலையிலும் “ஒளியின் பிள்ளைகள்” என்பது உலகத்தோடு ஒத்துப்போகாமல் தேவனுடைய வார்த்தைகளைக் கைக்கொண்ட நடக்கவும் மக்களுக்கு போதிக்கவும் தங்களை அர்ப்பணித்தவர்களை குறிக்கிறது. அவர்கள் வேதாகமத்திலுள்ள அனைத்து வார்த்தைகளையும் விசுவாசிப்பார்கள், அவைகளை நடைமுறைப்படுத்துவார்கள், அவைகளை மக்களுக்குப் போதிப்பார்கள். அவர்களது வார்த்தைகளை உறுதிப்படுத்துகிற கிரியைகள் பின்தொடரும். அதினால் அவர்கள் வழிநடத்துகிற மந்தைகள் விசுவாசத்தையும் நம்பிக்கையையும் பெறுவார்கள்.

“இப்பிரபஞ்சத்தின் பிள்ளைகள்” என்பது ஜனங்களுக்கு இயேசுகிறிஸ்துவைக் குறித்தும் இரட்சிப்பின் பாதையைக் குறித்தும் போதித்தாலும் சூழ்நிலைகளுக்கு ஏற்றபடி அவர்கள் உலகத்தோடு ஒத்துப்போய்விடுவார்கள். தேவனுடைய பார்வையில் சரியானதை தேர்வுசெய்வதற்கு பதிலாய் இப்படி செய்துவிடும் மக்களை குறிக்கிறது.

அவர்கள் நாங்கள் தேவனுடைய வார்த்தையை தான் போதிக்கிறோம் என்பார்கள். ஆனால் அவர்கள் தங்கள் சொந்த வரம்புகளுக்குள்ளாகவே அப்படிச் செய்வார்கள். அவர்களால் தேவனுடைய கிரியைகளை காண்பிக்க முடியாது. மேலும், அவர்களுடைய திருச்சபையில் யாராகிலும் அவர்கள் அனுபவித்திராத ஆவிக்குரிய காரியங்களை அனுபவித்தால், அவர்கள் அவர்களை தடுத்து நிறுத்த முயற்சிப்பார்கள். அவர்கள் தேவனை குறித்துப் பிரசங்கிக்கும்போது உலக மக்களோடு தர்க்கங்களை தவிர்க்க போதியளவு பேசுவார்கள். அவர்கள் தங்கள் ஆதாயத்தைப் பின்பற்றி உலக மக்களின் வழிகளையும் எண்ணங்களையும் சேர்த்துக்கொள்வார்கள். அவர்கள் சூழ்நிலைக்கேற்றபடி நடப்பதால் பார்ப்பதற்கு புத்திமான்களை போல நடப்பதாக தோன்றும். இருப்பினும், தேவன் பிறர் அவர்களை குறித்து தவறாக அவதூறாகப் பேசினாலும்கூட உலகத்தோடு ஒத்துப்போகாதவர்களைத் தான் அங்கீகரிப்பார் (மத்தேயு 10:28). தேவனால் அங்கீகரிக்கத் தகுதியான போதகர்கள் இரட்சிப்பின் செய்தியை போதிப்பதை விட மிக அதிகமாக தேவனுடைய கிரியைகளைக் காட்டுவதால் தங்கள் மந்தைகளை பூரண விசுவாசத்திற்கு நேராக நடத்துவார்கள். அவர்கள் தங்கள் இருதயங்களை விருத்தசேதனம் செய்து தங்கள் கிரியைகளில் நல்ல மாதிரிகளை காண்பிப்பார்கள். அப்போது மட்டுமே அவர்கள் தேவனால் புத்திமான்களாகவும் பாராட்டை பெற தகுதியானவர்களாகவும் அங்கீகரிக்கப்படுவார்கள்.

### 4. அநீதியான ஆஸ்தியினால் உங்களுக்கு நண்பர்களை உருவாக்குதல்

லூக்கா 16:9 சொல்கிறது, “நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், நீங்கள் மாளும்போது உங்களை நித்தியமான வீடுகளிலே ஏற்றுக்கொள்வாருண்டாகும்படி, அநீதியான உலகப்பொருளால் உங்களுக்குச் சிநேகிதரைச் சம்பாதியுங்கள்.” இது நாம் அநீதியுள்ள மக்களையும்கூட அரவணைத்து, அவர்களும் கூட மனந்திரும்ப வழியை திறந்து, அவர்களை மாற்றி அவர்களை பூரண விசுவாசத்திற்கு நேராக வழிநடத்த வேண்டும் என்பதைக் குறிப்பிடுகிறது. அவர்கள் இரட்சிப்பைப் பெற்று பரலோகத்தை அடையும்போது, அவர்கள் பரலோகத்தில் அவர்களுடைய வாசஸ்தலங்களுக்கு நம்மை வரவேற்பார்கள்.

ஆகவே, நாம் தேவனுடைய பார்வையில் சரியில்லாமல் இன்னமும் மாம்சத்தில் வாழ்கிறவர்களை விட்டுவிடக்கூடாது. அவர்களுக்கு குறைந்த அளவு விசுவாசம் இருந்தாலும் தேவனுடைய சித்தத்திற்கு விரோதமாக வாழ்ந்தாலும்கூட, நாம் அவர்களை அன்போடு கண்டித்து, அவர்களுக்காக ஜெபித்து, முடிவுமட்டும் அவர்களுக்காக பொறுமையோடு நம்பிக்கை கொண்டால், அவர்கள் மாறி பரலோகத்திற்குச் செல்ல முடியும்.

நாம் எல்லா மக்களையும் அரவணைத்து, தனக்கு துரோகம் செய்யக்கூடிய, யூதாஸ்காரியோத்தையும் கூட முடிவுபரியந்தம் நேசித்த ஆண்டவருடைய இருதயத்தை அடையப்பெற்றால், நாம் நல்ல இருதயமுள்ள உக்கிராணக்காரர்களாக சகல தேசங்களிலுமுள்ள ஜனங்களை நமது இருதயத்தில் சுமந்து எண்ணற்ற ஆத்துமாக்களை இரட்சிப்பின் வழிக்கு நடத்த முடியும்.

கிறிஸ்துவில் பிரியமான சகோதர சகோதரிகளே, தேவனுடைய பிள்ளைகள்தான் ஆண்டவருடைய ஆஸ்தியை பராமரிக்கக்கூடிய உக்கிராணக்காரர்களாக உள்ளனர். நாம் உண்மையுள்ள உக்கிராணக்காரர்களாக ஒவ்வொரு நாளும் அவருடைய ஆஸ்தியை அதிகரிக்க வேண்டும். ஆண்டவரை பிரதிபலிக்கிற நல்ல இருதயமுள்ள உக்கிராணக்காரர்களாக மாற வேண்டும். இப்படிச் செய்வதால் நாம் தேவனுடைய அன்பையும், அவருடைய பாராட்டையும் பெறுகிறவர்களாக மாறும்படி ஆண்டவருடைய நாமத்தில் ஜெபிக்கிறேன்.

**விசுவாசத்தின் அறிக்கை**

1. மான்மின் மத்திய திருச்சபை வேதாகமம் தேவனால் உச்சரிக்கப்பட்ட பரிபூரணமும் பிழையற்றதுமான வார்த்தை என நம்புகிறது.
2. மான்மின் மத்திய திருச்சபை திரித்துவ தேவனின் ஐக்கியத்தையும் கிரியைகளையும் நம்புகிறது; பரிசுத்த பிதாவாகிய தேவன், பரிசுத்த குமாரனாகிய தேவன் மற்றும் பரிசுத்த ஆவியாகிய தேவன்
3. மான்மின் மத்திய திருச்சபை, இயேசு கிறிஸ்துவின் மீட்கும் இரத்தத்தினால் மாத்திரமே நம்முடைய பாவங்கள் மன்னிக்கப்படுகின்றது என நம்புகிறது.
4. மான்மின் மத்திய திருச்சபை இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலையும், பரமேறுதலையும் அவரின் இரண்டாம் வருகையையும், 1000 வருட அரசாட்சியையும், நித்திய பரலோகத்தையும் நம்புகிறது.
5. மான்மின் மத்திய திருச்சபை அங்கத்தினர்கள் ஒவ்வொரு முறையும் அவர்கள் கூடிவரும்போதெல்லாம் தங்களது விசுவாச அறிக்கையை “அப்போஸ்தலருடைய விசுவாச பிரமாணத்தின்” மூலமாக அறிக்கை செய்து, அதின் சொற்படியான உள்ளடக்கத்தை நம்புக்கின்றனர்.

“எல்லோருக்கும் ஜீவனையும் சுவாசத்தையும் சகலத்தையும் கொடுக்கிற அவர் [தேவன்]...” [அப். 17:25]

“அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை; நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை” [அப். 4:12]



# உங்கள் இருதயத்தில் பரலோகராஜ்யம் உள்ளதா?

இயேசு லூக்கா 17:21ல், “தேவனுடைய ராஜ்யம் உங்களுக்குள் இருக்கிறதே” என்றார். பரலோகராஜ்யம் நம் இருதயத்தில் இருந்தால், நம்முடைய வாழ்வு எப்படியிருக்கும்? பரலோகராஜ்யத்தை தங்கள் இருதயங்களில் கொண்டிருப்பவர்களுடைய மூன்று குணாதிசயங்களை நாம் பார்ப்போம்.

## பரலோகத்தின் நம்பிக்கையினால் நீங்கள் மகிழ்ச்சியினால் நிறைந்திருப்பீர்கள்

வயதான முதியவர் ஒருவர் வீடு இல்லாமல் இருக்கிறார் என்று வைத்துக் கொள்வோம். அவர் அநேக நாட்களாக சாப்பிடவில்லை. அவர் பசியையும் வேதனையையும் உணரலாம். ஆனால், இந்த நபர் தன் பையில் பெரும் தொகையை வென்ற லாட்டரி டிக்கெட் வைத்திருந்தால் எப்படியிருக்கும்? அவர் தன் சூழ்நிலையைக் குறித்து வேதனைப்படமாட்டார், மாறாக அந்தப் பணத்தை எப்போது பெறுவோம் என்று எதிர்காலத்தைக் குறித்து நம்பிக்கையோடு இருப்பார். அப்படியானால், தற்காலிகமாக கஷ்டமான சூழ்நிலையில் அவர் இருந்தாலும் அவர் சந்தோஷமாக இருப்பார்.

பரலோகமும்கூட, கண்ணீர், துக்கம், வேதனை அல்லது மரணம் இல்லாத இடம்தான். தேவனுடைய பிள்ளைகளுக்காக இந்த அழகான பரலோகராஜ்யம் ஆயத்தமாக்கப்பட்டுள்ளது. பரலோகத்தில் உள்ள நம்முடைய வாழ்வு நித்தியமானது, ஆனால் நம்முடைய பூமிக்குரிய வாழ்வு தற்காலிகமானது. ஆக, பரலோகத்திற்கான நம்பிக்கையுடையவர்கள் இந்த வாழ்வின் கஷ்டங்களை குறித்து பொருட்படுத்தமாட்டார்கள். பரலோகத்திற்கான நமது நம்பிக்கை எத்தனை பெரிதாக உள்ளதோ அந்தளவு நமது இருதயத்தில் மகிழ்ச்சி பெரி–தாயிருக்கும்.

நம்முடைய ஆவிக்குரிய வாஞ்சையினால்தான், நாம் நம்முடைய பரலோக வாசஸ்தலங்கள் எப்படி கட்டப்படுகின்றன, மேலும் நாம் பரலோகத்தில் எந்த வகையான வெகுமதிகள் எந்தளவு குவித்துள்ளோம் என்று வியக்கிறோம். நம்முடைய தேவனிடமும் நம்முடைய மணவாளராகிய ஆண்டவரிடமும் எதிர் காலத்தில் என்ன அறிக்கைச் செய்வோம் என்பதை குறித்து நினைக்கிறோம்.

இவ்வாறு பரலோகம் நமது இருதயங்களில் இருந்தால், நாம் ஆண்டவருடைய அழகான மணவாட்டிகளாக நம்மைநாமே அலங்கரித்துக்கொள்ள முடியும். கொலோசெயர் 3:1–2 சொல்கிறது, “நீங்கள் கிறிஸ்துவுடன்கூட எழுந்ததுண்டானால் கிறிஸ்து தேவனுடைய வலதுபாரிசத்தில் வீற்றிருக்கும் இடத்திலுள்ள மேலானவைகளைத் தேடுங்கள். பூமியிலுள்ளவைகளையல்ல, மேலானவைகளையே நாடுங்கள்.” நாம் நமது சிந்தையை மேலானவைகள் மேல் வைத்து பரலோகத்திற்கான நம்பிக்கையோடு களிகூருவோம்.

## தேவன் பேரிலும் ஆண்டவர் பேரிலும் உள்ள உங்களது அன்பு அதிக ஊக்கமுள்ளதாக மாறும்

பரலோகத்தைக் குறித்து ஒருவன் குறைவாக நினைக்கிறபடியால், அவன் தேவனைக் குறித்து நினைக்க குறைந்த நேரமே எடுத்துக்கொள்வான். மாறாக, அவன் உலகத்திலுள்ளவைகளைப் பார்த்து, உலக இன்பங்களை தேடுகிறான். அவன் ஜெபித்தாலும்கூட, அவன் கிருபையையோ பரத்திலிருந்து வெளிப்பாட்டையோ பெற்றுக்கொள்ள முடியாது. அவன் ஜெபிப்பதற்கு பெலனை இழந்துபோக போக, அவன் ஜெபிப்பதை இரண்டொருதரம் தவிர்க்கலாம். இறுதியாக ஜெபிப்பதையே நிறுத்திவிடுவான். அவன் ஆராதனைகளையும்கூட தவிர்க்க ஆரம்பிப்பான்.

அவனுடைய இருதயம் உலகப்பிரகாரமான காரியங்களால் நிறைந்துவிட்டபடியால், அவன் ஆராதனை வேளைகளிலும்கூட புரிந்துக்கொள்ளுதலை பெறமாட்டான். அவைகளிலிருந்து எந்த ஒரு கிருபையையும் பெறமாட்டான். அவன் கொடுக்கப்படுகிற செய்திகளை தான் அறிந்திருப்பதாக நினைத்து வீணான சிந்தையில் மூழ்கிவிடுவான். இவ்வாறு, அவனுடைய கிறிஸ்தவ வாழ்வு சம்பிரதாயமாக மாறிவிடுகிறது. அவனுடைய விசுவாசம் வெதுவெதுப்பானதாகவும் அல்லது குளிரானதாகவும் மாறிவிடுகிறது.

ஆக, 1யோவான் 2:15 சொல்கிறது, “உலகத்திலும் உலகத்திலுள்ளவைகளிலும் அன்புகூராதிருங்கள்; ஒருவன் உலகத்தில் அன்புகூர்ந்தால் அவனிடத்தில் பிதாவின் அன்பில்லை.” நமக்காக யாவையும் சிருஷ்டித்து பரலோகத்திற்கான ஆயத்தத்தில் நம்மை வேளாண்மை செய்து பண்படுத்துகிற தேவனுடைய அன்பும், நம்முடைய பாவங்களிலிருந்து நம்மை மன்னித்து இரட்சிப்பு அருளிய ஆண்டவருடைய அன்பும் உங்களிலிருந்தால் உங்களால் உலகத்தை நேசிக்க முடியாது.

பரலோகத்திற்கான அதிக நம்பிக்கை உங்களில் இருக்க இருக்க, நீங்கள் தேவனுடைய வார்த்தையில் அதிகமாக வாழவிரும்புவீர்கள். எப்போதும் எல்லா நேரத்திலும் அவரை அதிகமாக தவறவிடுவீர்கள். உங்களால் தேவனையும் உலகத்தையும் நேசிக்கமுடியாது. இது இருள் வரும்போது வெளிச்சம்தான் மறைந்துவிடும்; வெளிச்சம் வரும்போது இருள்போய்விடும் என்பது போல அவைகளில் ஒன்றை நீங்கள் ஏற்றுக்கொண்டால், மற்றொன்று போய்விடும்.

நீங்கள் பரலோகத்தை வாஞ்சித்து தேவனை நேசித்தால், உலகப்பிரகாரமான காரியங்கள் இனி உங்களுக்கு இன்பமாயிராது. நீங்கள் ஆவியில் எளிமையாகி தேவனுடைய கிருபைக்காக பசியோடிருப்பீர்கள். நீங்ள் நீதிக்காக பசிதா–கமுள்ளவர்களாயிருப்பீர்கள். நீங்கள் ஜெபத்தில் பரிசுத்த ஆவியின் ஆதிக்கத்தை அனுபவிக்க விரும்புவீர்கள். அதில் நீங்கள் உங்கள் பாவங்களை தூக்கி எறிந்து ஆவிக்குரிய இரகசியங்களை புரிந்துக்கொள்ள முடியும்.

மேலும், நீங்கள் ஆத்துமாக்களை பராமரித்து தேவனுடைய ராஜ்யத்திற்காக உண்மையாய் வேலை செய்யும்போது, உங்கள் இருதயத்திலுள்ள ஆறுதலும் சமாதானமும் பெரிதாயிருக்கும். ஆவிக்குரிய மகிழ்ச்சி இந்த உலகத்திலுள்ள எந்த இன்பங்களுடனும் ஒப்பிட முடியாதது. நீங்கள் காலையில் எழுந்து உங்கள் கண்களை திறந்தவுடன், தேவனுடைய அன்பு உங்கள் சிந்தை முழுவதும் ஒடும். மேலும் நீங்கள் வீதியில் வானத்தை நோக்கிப் பார்க்கும்போது, இயல்பாகவே, “பிதாவே, உம்மை நேசிக்கிறேன், ஆண்டவரே உம்மை நேசிக்கிறேன்!” என்று அறிக்கைச் செய்வீர்கள்.

## நீங்கள் எல்லாவற்றிலும் அதிக உண்மையுள்ளவர்களாக இருப்பீர்கள்

சில சுறுசுறுப்பான தளரா ஊக்கமுள்ள மக்கள் எல்லா விஷயங்களிலும் கடினமாக உழைப்பார்கள். இன்னும் சில மக்கள் தங்களுக்கு பிடித்த வேலைகளில் மட்டுமே உண்மையுள்ளவர்களாயிருப்பார்கள். ஆனால் அவர்களுக்கு பிடிக்காத வேலைகளை ஏனோதானோவென்று தான் செய் வார்கள். அவர்கள் முறுமுறுக்கவும்கூட செய்வார்கள். யாராகிலும் பார்க்க தளரா ஊக்கமற்றவர்களாய், காணப்பட்டால், அவர்கள் அசௌகரிகமடைந்து சமாதானத்தை உடைத்துவிடுவர். ஆக, ஒருவர் மாம்சீக ரீதியில் கடினமாக உழைப்பதினால் ஒருவர் உண்மையாகவே உண்மையுள்ளவராய் இருக்கிறார் என்று சொல்லிவிட முடியாது. உண்மையான உண்மை நல்ல இருதயத்திலிருந்தும், தேவனுக்காக அன்பிலிருந்தும், பரலோகத்திற்கான நம்பிக்கையிலிருந்தும் வரும்.

பரலோகம் நம் நடுவில் இருந்தால், நாம் இயல்பாகவே எங்கேயும் எப்போதும் உண்மையுள்ளவர்களாயிருப்போம். நாம் நம்முடைய குடும்ப அங்கத்தினர்களுக்கு முழு மனதோடு சேவை செய்வோம்; அதை மகிழ்ச்சியான முகங்களோடு செய்வோம். வேலை ஸ்தலத்திலும்கூட மகிழ்ச்சியினாலும் நன்றியினாலும் நிறைந்திருப்போம். எல்லா விஷயங்களிலும் நாம் நம்முடைய சிறப்பை முயற்சிப்பதால் பிறரிடத்திலிருந்து அங்கீகாரமும் பெறுவோம். நாம் பிறரைப்போல தகுதியுள்ளவர்களாக இல்லாவிட்டாலும்கூட அவர்களை சகித்துக்கொள்வோம். நாம் பிறருடைய ஆதாயத்தை தேடுவோம். திருச்சபையில், நம்முடைய கடமைகளை நிறைவேற்றுவதில் அதிக உண்மையுள்ளவர்களாயிருக்க முடியும். நாம் தயாள இருதயங்களை வேளாண்மைசெய்து பண்படுத்தி, யாவரோடும் சமாதானமாயிருந்து, எல்லாராலும புகழப்படுவோம்.

நீங்கள் சபையில் உண்மையாயிருக்கிறேன் என்று நினைத்து, உங்கள் வீடுகளில் அல்லது வேலைஸ்தலத்தில் போதிய அளவு உண்மையுள்ளவர்களாய் இல்லாதிருந்தால் பரலோகம் உண்மையாய் உங்களில் இருக்கிறது என்று சொல்ல முடியாது. உங்களுக்கு விருப்பமானவற்றை மட்டும் செய்ய தூண்டும் மாம்சீக சுபாவம் உங்கள் இருதயத்தில் இருக்கிறதா என்று நீங்கள் பரிசோதிக்க வேண்டும்.

சங்கீதம் 37:3ல் வாசிக்கிறோம், “கர்த்தரை நம்பி நன்மைசெய்; தேசத்தில் குடியிருந்து சத்தியத்தை மேய்ந்துகொள்.” நீங்கள் தேவனை உண்மையாய் நேசத்து பரலோகத்திற்காக ஏங்கினால், உங்கள் வாழ்வில் எல்லாவற்றிலும் தேவனுக்கு மகிமைச் செலுத்த முற்படுவீர்கள். நீங்கள் ஒரு குறிப்பிட்ட பகுதியில் மட்டுமல்ல எல்லா கோணங்களிலும் நீங்கள் உண்மையுள்ளவர்களாயிருக்க வேண்டும். அப்போது, நீங்கள் பரலோகத்தின் மகிழ்ச்சியை உணரலாம்.

நாம் நம்முடைய குடும்பத்தில் மற்றும் வேலைஸ்தலத்தில் உண்மையுள்ள கிறிஸ்தவர்களாக உண்மையாக அங்கீகரிக்கப்படுகிறோமா என்றும் நம்முடைய கடமையை நிறைவேற்றுவதில் பிற மக்களுடைய பார்வையில் எத்தகைய நபராக காணப்படுகிறோம் என்று நம்மை நாம் சற்று திரும்பிப் பார்ப்போம். அப்படிச் செய்வதால், நாம் சத்தியம் எதுவோ, அருமையானது எதுவோ, நற்கீர்த்தியுள்ளவை எவையோ அதிலே வாசஞ்செய்வோம்.




# “மிகப்பெரிய கடன் பிரச்சனையிலிருந்து நான் விடுவிக்கப்பட்டேன்”



கண்காணியாள் ராஜேஸ்வரி,
வயது 40, சென்னை மான்மின் சபை, இந்தியா

நான் நண்பர்களோடு இணைந்து சீட்டு நடத்தினேன். ஆனால் 2014ம் ஆண்டு மற்றவர்கள் என்னை ஏமாற்றிவிட்டதால், அவர்கள் கொடுக்க வேண்டிய கடனை நான்தானே கொடுக்கும்படிக்கு தள்ளப்பட்டேன். கடன் கொடுத்தவர் முடிவாக நான் ஏறக்குறைய 20 இலட்சம் திருப்பி தரவேண்டும் என என்மீது வழக்குப் போட்டார். என் சம்பளத்தை கொடுத்தால் முழு கடனையும் தீர்க்க 13 வருடங்களுக்கு மேலாகிவிடும். அந்தளவிற்கு அது ஒரு பெரிய தொகை.

நான் மிகுந்த வேதனையோடும் துயரத்தோடும் இருந்ததால் தற்கொலையைப் பற்றியும் யோசித்தேன். இதற்கிடையில், நவம்பர் 2014 அன்று, போதகர் ஜோசப் ஹான் அவர்கள் ஊழியம் செய்கிற சென்னை மான்மின் சபைக்கு என்னுடைய உறவினரான கண்காணியாள் இந்திரா என்னை அழைத்துச் சென்றாள். என் கணவரும்கூட சபைக்கு வந்தார். அவர் ஆட்டோ ஓட்டி வரும் வருமானத்திலும் நான் வேலை செய்வதை வைத்தும் கடனை திரும்பச் செலுத்தி வந்தோம். நாங்கள் மிகுந்த கஷ்டத்தில் இருந்தபோதிலும், தலைமை போதகர் அறிவர். ஜேராக் லீ அவர்களின் நல்ல போதனையின்படி பிறரோடு சமாதானமாய் இருக்க முயற்சித்தோம், கடனையும் திரும்பச் செலுத்த முயற்சித்தோம். இதற்கு இடைப்பட்ட நேரத்தில் என் வாழ்க்கையில் ஒரு ஆச்சரியமான தேவனுடைய கிரியை நடைபெற்றது.

பிப்ரவரி 24, 2017 அன்று என்மீதான வழக்கு விசாரணைக்கு வந்ததால் நான் காலையில் நீதிமன்றத்திற்குப் போனேன். நான் அதற்கு முன்பு தலைமை போதகருடைய வியாதியஸ்தர்களுக்கான ஜெபத்தைப் பெற்று, வானத்தை அண்ணாந்துப் பார்த்தேன். திடீரென்று, ஒரு வெள்ளையான வெளிச்சம் என்னிடத்தில் வந்து என்னை சூழ்ந்தது. அந்த நேரத்தில்தானே நான் தேவனுடைய அன்பை உணர்ந்ததால் கண்ணீர் சிந்தினேன். பத்து நிமிடத்திற்குப் பிறகு நீதிபதி என்னை அழைத்தார்; குற்றஞ்சாட்டப்பட்ட நான் நிரபராதி என்று சொன்னார். நீங்கள் செலுத்தக்கூடாத கடனைக்கூட இதுவரை உண்மையாக செலுத்தினிர்கள், இனி எவ்வித கடனையும் நீங்கள் செலுத்தவேண்டிய அவசியமில்லை என்று சொன்னார். அல்லேலூயா!

என் மகள் பவித்ராவிற்கு (வலது) நான்கு வருடங்களுக்கு முன்பு செவிப்பறை கிழிந்துப்போனது. அவள் சிகிச்சை பெற்றும், பின்விளைவுகளால் அவதிப்பட்டு வந்தாள். இந்நாட்களுக்கு முன்பு நடைபெற்ற சிறப்பு தானியேல் ஜெபக்கூட்டத்தில் அவள் பரிசுத்த ஆவியின் அக்கினி ஞானஸ்நானத்தை பெற்று பூரண சுகமடைந்துவிட்டாள். கல்லூரி கட்டணமில்லாததால் கல்லூரிக்கு போகமுடியாத நிலையில் இருந்த என் மகன் விஜய் (இடது) தற்போது கல்லூரிக்குப் போகிறான்.

நான் தேவனுடைய பிள்ளையாக மாறியிருப்பதால் மிகவும் நன்றியை உணருகிறேன். கூடுதலாக, என் குடும்பம் மேய்ப்பருடைய வல்லமையினால் சந்தோஷமான குடும்பமாக மாறியிருக்கிறது. நான் சகல நன்றிகளையும் மகிமையையும் தேவனுக்கே செலுத்துகிறேன்!



# “தலைமை போதகரின் ஜெபத்தினால் நான் படர்தாமரையிலிருந்து சீக்கிரமாகவே சுகமடைந்தேன்”

கண்காணி போயங் பேக், வயது 62, 16வது மாகாணம்

மே 5, 2017 அன்று என் உதட்டின் இடது பக்கத்தில் கொப்புளங்கள் உருவானது. என் உடல் முழுவதும் குளிர்ச்சியையும், வேதனையையும் உணர்ந்தேன். மே 8 காலை வேளையில், உதட்டின் இடது பக்கம் தொடங்கி கன்னம் உச்சந்தலை வரை கொப்புளங்கள் பரவிட்டது.

பரிசோதனையின் முடிவில் எனக்கு கொடிதான படர்தாமரை இருப்பதாகவும், என் செவியிலும் வீக்கம் ஏற்பட்டுவிட்டதாகவும் கேள்விப்பட்டேன். நான் அதிகமாக பயந்துப்போனதால் மருந்துகளை சாப்பிட்டேன், ஊசி போட்டுக்கொண்டேன். ஆனால் இரவில் என் ஈறுகளில் அதிக வலி எடுத்தது. மரத்தில் துளைப்போடும் கருவியை வைத்து தாக்குவதைப் போன்ற வலியின்நிமித்தம் என்னால் தூங்க முடியவில்லை.

மே 9 அன்று, என் மனைவி கண்காணியாள் கியும்சூன் லீ என் கடந்த கால தவறுகளிலிருந்து மனந்திரும்பும்படி எனக்கு அறிவுரைச் சொன்னாள். பிறகு எனக்காக தலைமை போதகர் அறிவர். ஜேராக் லீ அவர்கள் ஜெபித்துக் கொடுத்த கைக்குட்டையை (அப். 19:11–12) வைத்து ஜெபிப்பதாகச் சொன்னாள். அந்த நேரத்தில் நான் என் அறையில் தானே முழங்கால்படியிட்டு, நிறுத்த முடியாத கண்ணீரை சிந்தினேன்.

என் கடந்த காலத்தை நினைவுகூர்ந்து தேவனுடைய வார்த்தையின்படி வாழாததினால் முற்றிலுமாக மனந்திரும்பினேன். பின்பு என் மனைவி என் தலையின்மேல் கைக்குட்டையை வைத்து, தலைமை போதகரின் வியாதியஸ்தர்களுக்கான பதிவுசெய்யப்பட்ட ஜெபத்தைப் பெறும்படி செய்தாள். அந்த ஜெபத்தைப் பெற்றபிறகு, குளிர்ச்சியான உணர்வு போனது; வலியும் குறைந்தது.

மே 10 அன்று முழுவதும் GCN TVஐ பார்த்தேன். தலைமை போதகரின் ஒவ்வொரு பிரசங்கத்திற்குப் பிறகு வந்த அவருடைய வியாதியஸ்தர்களுக்கான ஜெபத்தைப் பெற்றுக்கொண்டேன். மாலை வேளையில், சீக்கிரமே தூங்கினேன். அடுத்த நாள் காலையில் நான் எழுந்தபொழுது என் முகத்தில் எந்தவித வலியையும் நான் உணரவில்லை.

உடனே நான் வலியில்லையே முகம் எப்படியிருக்கிறது என்று பார்க்கும்படி கழிவறைக்கு ஓடினேன்; மகிழ்ச்சியோடு கத்தினேன். என் முகத்தில் இருந்த கொப்புளங்கள் கருமையான பொருக்குகளாக மாறியிருந்தது; என் முகத்தின் வீக்கம் குறைந்துப்போயிருந்தது; எனக்கு வலியும் இல்லை. நான் மிகுந்த சந்தோஷத்தில் திளைத்துப் போனதால், “தேவன் என் வாழ்க்கையிலும் கிரியை செய்துள்ளார்” என்று அழுதவாறு கத்தினேன்.

என் சுகத்தை உறுதிச் செய்ய மருத்துவ பரிசோதனைக்குச் சென்றேன். மருத்துவர், “ஒரு பெரிய ஆபத்திலிருந்து வந்துவிட்டீர்கள். ஏறக்குறைய கண்பார்வை அல்லது கேட்கும் திறனை இழந்துப்போயிருக்க வேண்டும்” என்று சொன்னார். அதிலிருந்து சுகமானதை என்னாலேயே அறிய முடிந்தது. நான் சகல நன்றிகளையும் மகிமையையும் தேவனுக்குச் செலுத்துகிறேன். எனக்காக ஜெபித்த தலைமை போதகருக்கு என் நன்றிகளை நான் செலுத்துகிறேன்.



அவர் ஜெபத்தைப் பெற்ற பிறகு, படர்தாமரையினால் இடது பக்க உதடு, கன்னத்தில் உண்டான வலியும், காயமும் மறைந்தது, வீக்கங்கள் குறைந்தது, பாதிக்கப்பட்ட பகுதிகளை சுற்றிலும் பக்குள் சூழ்ந்து குணமானார்.

# “கிழிந்துப்போன என் முழங்கால் குருத்தெலும்பிலிருந்து சுகம்பெற்றேன்”

சகோதரி இரே ஜின், வயது 19, மாணவர்கள் ஞாயிறு ஓய்வுநாள் பள்ளி



பிப்ரவரி 2017ல், என் கல்லூரி நுழைவுத் தேர்வுக்காக நான் ஓட்டப் பந்தய பயிற்சியில் இருந்தேன். நான் வேகத்தை குறைக்கும்படி திடீரென்று நிற்க முயற்சித்தேன். அந்த தருணத்தில், வேகமாய் கீழே விழுந்ததால் என் இடது கால் தரையில் வேகமாய் மோதியது; என் முட்டியில் மிகுந்த வலியை உணர்ந்தேன். அந்த வலி தொடர்ந்து இருந்தவந்தபோதிலும் அது சரியாகிவிடும் என்று தான் நினைத்தேன். எப்படியிருந்தாலும், அடுத்த நாள் நான் எழுந்தபொழுது, என் முழங்காலை மடக்க முடியவில்லை. அல்ட்ராசோனோகிராபி பரிசோதனை முடிவு என் முழங்காலில் உள்ள குருத்தெலும்பு கிழிந்து இரத்தம் கட்டியிருப்பதை காண்பித்தது.

நான் ஒரு மாதத்திற்கு என் இடது காலில் உதவி உபகரணத்தை அணிந்து கொள்ள வேண்டியிருந்தது, இருந்தும் வலி மறையவில்லை. தேர்வுக்காக பயிற்சி செய்ய முடியாததால், மாற்று பயிற்சியை மாத்திரம் செய்துவந்தேன். தேர்வை பற்றிய அச்சத்தை நான் உணர்ந்தேன். ஏப்ரல் மாதத்தின் கடைசியில், என் தரத்தை உயர்த்துவதற்காக டேக்வாண்–டோ உதைத்தல் தேர்வுக்குச் சென்றேன். தேர்வின்போது வலியை பொறுத்துக்கொண்டேன். சுகமடையவதற்காக மிகவும் வாஞ்சையை பெற்றுக்கொண்டேன்.

மே 6 அன்று, உயர்நிலைப் பள்ளி மாணவர்கள் தலைமை போதகர் அறிவர். ஜேராக் லீ அவர்களை சந்தித்த பொழுது, நான் அவருடைய ஜெபத்தைப் பெற்றுக்கொண்டேன். அவர், “அவை பரிசுத்த ஆவியானவரின் அக்கினியினாலும், அக்கினி ஞானஸ்நானத்தினாலும் சுட்டெரிக்கப்படுவதாக. அவளுடைய கிழிந்த குருத்தெலும்பில் தேவனுடைய வல்லமை இறங்குவதாக; பூரணமாக சுகமாவதாக” என ஊக்கமாக ஜெபித்தார். எனக்கான அவருடைய மிகப் பெரிய அன்பை உணர்ந்தேன். திடீரென்று கண்ணீர் வழிந்தது. அந்த நேரம் முதற்கொண்டு என் முழங்கால் தேற ஆரம்பித்தது. மே 10 அன்று, எனக்கு முற்றிலும் வலியே இல்லை. ஓடுவதிலும் குதிப்பதிலும் எனக்கு எந்தவித பிரச்சனையும் இல்லை. அல்லேலூயா!

அல்ட்ராசோனோகிராபி பரிசோதனை முடிவுகள்




ஜெபத்திற்கு முன்பு: அவளுடைய முழங்காலில் கிழிந்த குருத்தெலும்பு இரத்தம் கட்டிப்போகச் செய்தது.



ஜெபத்திற்கு பின்பு: கிழிந்த குருத்தெலும்பினால் இரத்தம் கட்டினது இல்லாமல் போனது.

GCN Global Christian Network
15D/41, Ponnan Kinaru Street, Villivakkam, Chennai -600 049, PH: 044-26172471
www.gcntv.org
e-mail: gcntvindia@gmail.com

MIS Manmin International Seminary
15D/41, Ponnan Kinaru Street, Villivakkam, Chennai -600 049, PH: 044-26172471
www.manminseminary.org
e-mail: indiamis@gmail.com

Chennai Manmin Holiness Church
15D/41, Ponnan Kinaru Street, Villivakkam, Chennai -600 049
PH: 044-26172471
e-mail: manminnewsasia@gmail.com

WCDN World Christian Doctors Network
15D/41, Ponnan Kinaru Street, Villivakkam, Chennai -600 049
PH: 044-26172471
e-mail: wcdnindo@gmail.com